

# சமாதானம்

## வியாக்கியானம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

# யோவான் 14:27

சமாதானத்தை உங்களுக்கு
வைத்துப்போகிறேன், என்னுடைய
சமாதானத்தையே உங்களுக்குக்
கொடுக்கிறேன்; உலகம்
கொடுக்கிறபிரகாரம் நான்
உங்களுக்குக் கொடுக்கிறதில்லை.
உங்கள் இருதயம் கலங்காமலும்
பயப்படாமலும் இருப்பதாக.



உங்களிடத்தில் எப்பொழுதாவது உண்மையான சமாதானம் இருந்திருந்தால், நீங்கள் இயேசுவை உடையவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் இயேசுவை உடையவர்களாயில்லையென்றால் நீங்கள் அவரிடத்தில் வரும் வரைக்கும் சமாதானம் என்றால் என்ன என்று கூட உங்களுக்குத் தெரியாது.

60-06-04 யாரிடத்தில் போவோம்?, Para 123

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



நீங்கள் ஜீவித்தாலும், நீங்கள் மரித்தாலும், மழை வந்தாலும், சூரியன் பிரகாசித்தாலும், எப்படியிருந்தாலும் கவலையில்லை. எப்படியும் நீங்கள் சமாதானத்தை உடையவர்களாய் இருக்கிறீர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-06-04 யாரிடத்தில் போவோம்?

118. பின்னர் ஐந்தாவதாக, இன்னொரு காரியம், நான் இதை சொல்லியாக வேண்டும். அவர் ஒருவரே வெற்றியுள்ள பாதுகாப்பான சந்தோஷமும் சமாதான முமாய் இருக்கிறார். அந்தக் காரணத்தி னால்தான் நாம் அவரிடத்திற்கு வருகி றோம். ஓ, நீங்கள் முட்டாளைப்போன்று சிரிக்கக்கூடும் அல்லது இங்கிருந்து நீங்கள் வெளியே சென்று ஏதோ நகைச்சுவையை அல்லது ஏதோ காரியத்தை சில சினிமா நட்சத்திரங்கள் விரண்யமாக பேசுகையிலே உங்களுக்கு இழுப்பு உண்டாகும் வரை சிரிப்பதையும் நான் அறிவேன், அல்லது யாராவது சற்று அதிகமாகக் குடிக்கக்

கொடுத்து நீ ஒரு பைத்தியக்காரனைப் போன்று சிரிக்கலாம். ஆனால் அது உனக்கு சமாதானத்தைக் கொண்டு வருகிற தில்லை. இயேசு கிறிஸ்துவண்டை வருவது போன்று வேறு ஏதும் சமாதானமோ வேறு ஏதோ சந்தோஷமோ கிடையாது.

119. நான் ஜனங்கள் அணிந்து கொள் வதை கண்டிருக்கிறேன். நான், வாலிப ஸ்திரீகள் வண்ணந்தீட்டி அவர்களுடைய புதிய கம்பளித்துணி துண்டுகளால் அவர் களை சுற்றிக்கொண்டு சந்தோஷமாய் இருப்பது போன்று நடிக்க முயற்சிப்பதை கண்டிருக்கிறேன். அவர்கள் சந்தோஷமாய் இருப்பதில்லை. அவர்கள் வெறுமனே ஒரு வரையப்பட்ட தீயைத்தான் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வரையப் பட்ட தீயினால் குளிர்காய முடியாது.

120. வாலிப மனிதர்கள் தன்னுடைய தசைநார்கள் மிகவும் பெரியதாய் இருக்கிற தென்றும் நீங்கள் ஒரு ஆணியை அடிக்க முடிந்தால் அது ஒரு போதும் அவனை புண்படுத்தாது என்றும், ஒரு கத்தியி னுடைய கூர்மையான தகடும் அவனண் டையில் வளைந்து விடும் என்று சிந்திக்க முயற்சிப்பவர்களை நீங்கள் கண்டிருக்கி றீர்கள். சரியாக அவனுக்கு சில வருஷங் களைக் கொடுங்கள். அவன் அப்படியே வயது சென்றவனாகி, சுருங்கினவனா வான். கிறிஸ்துவுக்குப் புறம்பே நித்திய மான சந்தோஷமே இல்லை.

121. இங்கே பாருங்கள் நான்......... இன்றிரவு உங்களில் எவருமே பரிபூரண ஆரோக்கியத்தில், உங்களுடைய குடும்பம் பரிபூரண ஆரோக்கியத்தில், உங்களைச்

சுற்றிலும் உள்ள யாவரும் இங்கே இருக்கின்றீர்கள். ஆனால் இங்கே இல்லாத தாயாரைக் குறித்து என்ன? உன்னுடைய தகப்பனார் இப்பொழுது மரித்துக் கொண் டிருக்கவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்? ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் இங்கிருந்து சற்று தூரத்தில், உங்களுடைய பிள்ளைகளில் ஒன்று கொல்லப்படவில்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? வேறு ஏதோ காரியம் சம்பவிக்கவில்லையென்று உங்களுக்கு எப்படித் தெரியும்? இன்றிரவு நீங்கள் இந்த கட்டடத்தை விட்டு வெளியே போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் ஒரு இருதய பாதிப்பால் கீழே விழலாம். உங்களுக்குத் தெரியாது. ஆக கிறிஸ்துவுக்குப் புறம்பாக நித்தியமான சந்தோஷமே இல்லை. அந்தக்

காரணத்தினால்தான் நாம் அவரிடத்தில் வந்தாக வேண்டும்.

122. நீங்கள் விஸ்கி குடிக்கலாம். நீங்கள் சந்தோஷம் கொள்ளலாம். நீங்கள் உலகத்தின் காரியங்களை உடையவர்களாய் இருக்கக்கூடும். ஆனால் அவைகள் வெற்றியான சந்தோஷங்கள் அல்ல. அவரைப்போன்று சமாதானத்தை வேறொன்றாலும் கொடுக்க முடியாது. அவர் சமாதானத்தை கொடுக்கிறார்.

“ஓ”, நீங்கள்”, “என்னிடத்தில் சமாதானம் உண்டு” என்கிறீர்கள்.

123. உங்களிடத்தில் எப்பொழுதாவது உண்மையான சமாதானம் இருந்திருந்தால், நீங்கள் இயேசுவை உடையவர்களாய்

இருக்கிறீர்கள். நீங்கள் இயேசுவை உடையவர்களாயில்லையென்றால் நீங்கள் அவரிடத்தில் வரும் வரைக்கும் சமாதானம் என்றால் என்ன என்று கூட உங்களுக்குத் தெரியாது.

124. நான், ஜனங்களை, இராஜாக் களை, சர்வாதிகாரிகளை, மகத்தான மனிதர் களை, உடற்பயிற்சிப் போட்டியாளர்களை, சினிமா நட்சத்திரங்களை மற்றும் இன்னும் எல்லாவற்றையுமே கண்டிருக்கிறேன். அவர்கள் சமாதானமுள்ளவர்களாய் இல்லை. அவர்களை நோக்கிப் பாருங்கள், ஒரு சில நிமிடங்கள் அவர்களுடைய கண்களைப் பாருங்கள். அவர்கள் நரம்புக் கோளாறு உள்ளவர்கள். புரிகின்றதா?

125. இயேசு கிறிஸ்துவுக்குப் புறம்பான சமாதானத்தை எந்த மனிதனோ, எந்த ஸ்திரீயோ, எந்த குழந்தையோ ஒருவருமே உடையவர்களாய் இருக்க முடியாது. “என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிற தில்லை” புரிகின்றதா? உலகம் கொடுக்கிற பிரகாரமாக நான் உங்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கிறதில்லை. ஆனால் அவர் நித்திய சமாதானத்தை, ஒரு நிலையான சமாதானத்தை உடையவராயிருக்கிறார். நீங்கள் ஜீவித்தாலும், நீங்கள் மரித்தாலும், மழை வந்தாலும், சூரியன் பிரகாசித்தாலும், எப்படியிருந்தாலும் கவலையில்லை. எப்படியும் நீங்கள் சமாதானத்தை உடையவர்களாய் இருக்கிறீர்கள்.

126. எனக்கு சகோதரன் ஷக்காரியன் (Shakarian) அவர் பாடும் பழைய பாடலின் எண் எனக்குப் பிடிக்கும். மகத்தான பெரிய வயோதிப நபர், “ஆற்றைப் போன்ற சமாதானம் எனக்கு உண்டு, ஆற்றைப் போன்ற சமாதானம் எனக்கு உண்டு” என்று பாடுவார். ஓ, அது சரியே நீங்கள் சமாதானத்தை உடையவர் களாய் இருக்கும்பொழுது, நீங்கள் கிறிஸ் துவை உடையவர்களாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவே உங்களுடைய சமாதானமா யிருக்கிறார். ஆக அந்தக் காரணத்தினால் தான் நாம் சமாதானத்தைக் கண்டடைய கிறிஸ்துவண்டை வர வேண்டும்.





நீங்கள் பரிசுத்த ஆவியில் நிறைந்தவர்களாயிருந்தால், நீங்கள் என்ன பெற்றிருக்கிறீர்கள்? நீங்கள் வல்லமை பெற்றிருக்கிறீர்கள், அன்பு பெற்றிருக்கிறீர்கள், சமாதானம் பெற்றிருக்கிறீர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 59-12-17 பரிசுத்த ஆவி எதற்காக அருளப்பட்டது?

75. இங்கு அமர்ந்துள்ள ஒவ்வொரு வரும் ஏதோ ஒன்றினால் நிறைக்கப்பட் டுள்ளனர். (இதன் பிறகு நான் முடிக்கப் போகிறேன். நான் முடித்தே ஆகவேண் டும்). நீங்கள் ஏதோ ஒன்றினால் நிறைக் கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் ஏதோ ஒன்றி னால் நிறையப்படாமல் இங்கு உட்கார்ந் திருக்க முடியாது. உங்களுக்குள் நீங்கள் ஜீவனைப் பெற்றிருக்கிறீர்கள். அந்த ஜீவன் உங்களை ஆளுகிறது. அந்த ஜீவன் ஒரு ஆவியினால் ஆளப்படுகிறது. நீங்கள் உலகத்தினால் நிறைந்தவர்களாய், உலகத் திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூருகிறவர்களாய் இருக்கலாம். தேவன்

உங்கள் மேல் இரக்கமாயிருப்பாராக. நீங்கள் ஏதோ ஒரு சபையின் கோட்பாடு களினால் நிறைந்தவர்களாயிருந்து, சிறு ஜெபங்களை ஏறெடுத்து, அது உங்களை... அல்லது மரித்துப்போன யாரோ ஒருவ ரிடம் உங்கள் ஜெபத்தை ஏறெடுத்து, அது உங்களை அல்லது ஏதோ ஒரு அடை யாளத்தை உங்கள் உடலின் குறுக்கே போடுபவர்களாய் இருக்கலாம்; தேவன் உங்கள் மேல் இரக்கமாயிருப்பாராக.

நீங்கள் மார்க்கத்தினால் நிறைந்தவர்க ளாய் இருக்கலாம். அது இன்னும் மோச மானது. அது உண்மை. அது உண்மை. கடைசி நாட்களில் அவர்கள் மிகவும் மத சார்பு கொண்டவர்களாய், தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களாயிருப்பார்கள். இப்ப டிப்பட்டவர்களை நீ விட்டுவிலகு என்று

வேதம் கூறுகிறது. நீங்கள் மார்க்கத்தினால் நிறைந்தவர்களாயிருந்தால், நீங்கள் பரிதபிக்கப்படத்தக்கவர்கள். வெறும் மார்க்கம், அவ்வளவுதான். நீங்கள் கோட்பாடுகளினால் நிறைந்தவர்களாயிருந்தால், நீங்கள் எதைக் குறித்து பேசுகிறீர்கள் என்பதை அறியாமலிருக்கிறீர்கள். நீங்கள் உலகத்தினால் நிறைந்தவர்களாயிருந்தால், நீங்கள் குருடராயிருக்கிறீர்கள்.

நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்களாயிருக்கலாம். ஆமென்! நீங்கள் அப்படி இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். அப்படி இல்லையென்றால், நீங்கள் நிறைக்கப்படுவீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் பரிசுத்த ஆவியில் நிறைந்தவர்களாயிருந்தால், நீங்கள் என்ன பெற்றிருக்கிறீர்கள்? நீங்கள் வல்லமை பெற்றிருக்கிறீர்கள், அன்பு பெற்றிருக்கிறீர்

கள், சமாதானம் பெற்றிருக்கிறீர்கள். “என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை” (யோவான் 14:27) நீங்கள் சமாதானம் பெற்றிருக்கிறீர்கள், நீங்கள் முத்தரிக்கப்பட்டிருக்கிறீர்கள், உங்களுக்கு ஒரு அடையாளம் உண்டு. ஆமென்! உங்களுக்கு இளைப்பாறுதல் உண்டு, உங்களுக்கு சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமான சந்தோஷம் உள்ளது. நீங்கள் நங்கூரமிடப்பட்டிருக்கிறீர்கள். ஓ, என்னே! பரிசுத்த ஆவி உள்ள போது நீங்கள் அப்படித்தான் இருக்கிறீர்கள். நீங்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தால், நீங்கள் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குள் பிரவேசித்து, கடைசி நாளில் உயிர்த்தெழுதலுக்காக காத்திருப்பீர்கள்.

76. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வரப் போகும் உலகத்தில், அவர் மகிமையிலும் மகத்துவத்திலும் வரப் போவதாக கூறியுள்ளார். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும். அவருக்குள் நித்திரையடைந்தோரின் அழிவுள்ள சரீரங்கள். அவருக்குள் நீங்கள் எப்படி நுழைகிறீர்கள்? ஒரே ஆவியினாலே நாமெல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம். அவருக்குள் நித்திரையடைந்தோரின் அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபமடையும். அந்த மகிமையின் சரீரத்தில் அவர் எல்லாவற்றையும் தமக்கு கீழ்ப்படுத்திக் கொள்ள வல்லவராயிருக்கிறார். "பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்” என்று யோவான் கூறினான். (வெளி: 14:13). அதற்காகத்தான் அவர் பரிசுத்த ஆவியை அனுப்பினார். ஓ! இயேசு என்னுடையவர் என்னும் ஆசீர்வதிக்கப் பட்ட உறுதி. நான் அவரில் இருக்கிறேன்; அவர் என்னில் இருக்கிறார்; பிதா அவரி லும், அவர் பிதாவிலும், பிதா என்னிலும் நான் அவரிலும்.

...இயேசு என்னுடையவர்

ஓ, தெய்வீக மகிமையின் என்னே ஒரு முன் அனுபவம்

நான் இரட்சிப்பின் சுதந்தரவாளி, தேவ னால் கிரயத்துக்கு கொள்ளப்பட்டவன்.

அவருடைய ஆவியினால் பிறந்து, அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டவன்

ஆமென்! அதை நான் விற்றுப் போடமாட்டேன். ஓ, என்னே!

மாணிக்கம், இரத்தினக் கற்கள், வெள்ளி, பொன்

ஆகியவைகளினால் அவருடைய பொக்கிஷம் நிறைந்துள்ளது, சொல்லி முடியாத ஐசுவரியம் அவருக்குள்ளது

நான் ராஜாவின் பிள்ளை, நான் ராஜாவின் பிள்ளை

என் இரட்சகர் இயேசு என்னை ராஜாவின் பிள்ளையாக்கினார்!



அதாவது, அன்றிரவு மரித்துப் போவீர்கள் என்று நீங்கள் அறிந்திருந்தால், ஒன்று மாத்திரமே உங்களுக்குச் சமாதானத்தை அளிக்க வல்லது. அதுவே நமது சமாதான காரணராகிய இயேசுவாகும். அவரே நமது சமாதானம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62-10-07 வாசலின் திறவுகோல்

54. சமாதானத்துக்கும் ஒரே ஒரு வாசல் மாத்திரமேயுள்ளது.

ஆம். "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்."

உண்மையான சமாதானத்துக்கு அவர் ஒருவரே வாசல்.

உங்களுக்கு சமாதானம் இருப்பதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம்.

நீங்கள் போதிய பணம் சேர்த்து வீட்டை வாங்கலாம்.

உங்கள் பிள்ளைகளுக்குத் துணிமணி கள் வாங்கவும், உண்பதற்கு ஆகாரம்

வாங்கவும், நீங்கள் போதிய பணம் சேமித்து வைத்திருக்கலாம், ஜனங்க ளிடையே நீங்கள் அதிகம் கீர்த்தி வாய்ந்த வராயிருக்கலாம்.

ஆயினும், உங்கள் பாதரட்சைகளைக் கழற்றி விட்டு, நீங்கள் இரவில் படுக்கைக் குச் செல்லும் போது, ஒன்று மாத்திரமே உங்களுக்குச் சமாதானத்தையளிக்க முடியும்..

**அதாவது, அன்றிரவு மரித்துப் போவீர்கள் என்று நீங்கள் அறிந்திருந்தால், ஒன்று மாத்திரமே உங்களுக்குச் சமாதானத்தை அளிக்க வல்லது. அதுவே நமது சமாதான காரணராகிய இயேசுவாகும். அவரே நமது சமாதானம்.**





## ஏசாயா 48:18

ஆ, என் கற்பனைகளைக்
கவனித்தாயானால் நலமாயிருக்கும்;
அப்பொழுது உன் சமாதானம்
நதியைப்போலும், உன் நீதி
சமுத்திரத்தின் அலைகளைப்போலும்
இருக்கும்.

## ஏசாயா 48:22

துன்மார்க்கருக்குச் சமாதானம்
இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.



# சமாதானம்

## வியாக்கியானம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து